கிருஷிகன்

(கிராம முன்னேற்ற இதழ்)

இந்திய குடியரசு முதல் ஜனாதிபதி

353/1.53.

... FEB 1953
MADRAS

டாக்டர் ராஜேந்திர பிரசாத்

வருட சந்தா 3 ரூபாய்

பயிர்த்தொழில் பண்ணை

மாத வெளியீடு

தனி பிரதி 4 அணா

"கிருஷிகன்"

(சந்தா முதலிய பொது விதிகள்)

1. கிருஷிகன் பத்திரிகைக்கு எந்த மாதத்தில் சந்தா அனுப்பியபோதிலும் அந்த வருஷம் ஜனவரி (தை) மாதத்திலிருந்துதான் கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

2. ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சந்தா தொகைகளை மணியார்டர் மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். மாதிரி பிரதி வேண்டுவோர் 0—5—0 ஸ்டாம்பு அனுபபவேண்டும்.

3. V. P. P. மூலமாக பத்திரிகையை பெற விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு 0—6—6 முன்னதாகவே ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றி V. P. P. மூலமாக பத்திரிகை அனுப்பபபடமாட்டாது.

4. "கிருஷிகன்" பத்திரிகை பிரதி (தமிழ்மீ 1வ) ஆங்கிலமீ 15வ இங்கிருந்து அனுப்பப்படும். குறிப்பிட்ட காலத்தில் பத்திரிகை சேரா விட்டால் காரியாலயத்திற்கு டை விஷயத்தை உடன் தெரிவித்தால் அதைப்பற்றி கவனிக்கப்படும். 7 தினங்களுக்குப் பிறகு வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

5. விவசாயி, விவசாயம், கைத்தொழில், கிராம முன்னேற்றம் அதைச் சார்ந்த விஷயங்களும் தவிர மற்ற விஷயங்கள் இப்பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கட்டுரைகள், அனுப்புகிறவர்கள் ஸ்டாம்புகள் வைத்து அனுப்பினாலன்றி அங்கீகரிக்கபபடாத கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

7. கிருஷிகன் காரியாலயத்திற்கு கடிதம் எழுதும்போது தங்கள் சந்தா நம்பரை குறிப்பிட்டு எழுதவேண்டும. கட்டுரைகள் சம்பந்தப்பட்டவைகளை ஆசிரியருக்கும், மற்றவைகள் மானேஜருக்கும் எழுதப்படவேண்டும்.

8. கட்டுரைகள் தெளிவாக, ஒரே பக்கத்தில் எழுதவேண்டும். பிரசுரிக்கப்படும் கட்டுரைகள் கிருஷிகன் காரியாலயத்தாருக்கு சொந்தமானதாகும் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகளுக்கு ஆசிரியர் உசிதம்போல் சன்மானம் ரொக்கமாகவோ, விவசாய கருவிகள், விதைகள், செடிகளாகவோ கொடுக்கப்படும்.

9. கிருஷிகன் சந்தாதாரர்களுக்கு நமது பண்ணையிலிருந்து வாங்கும் சொந்த வெளியீடுகளுக்கும், விதைகளுக்கும் 6¼% கழிவு தரப்படும்.

10. கிருஷிகனில் வெளிவரும் விஷயங்களை எவரும் அனுமதியின்றி பிரசுரிக்கக்கூடாது.

இதர விவரங்களுக்கு:—

மானேஜர் கிருஷிகன் காரியாலயம்

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் : அன்னியூர் P. O. : விழுப்புரம் S. I. R.

பொங்கும் ம[illegible]ளம்!　　　　　தங்குக எங்கும்!

மங்களகரமான பொங்கல் வாழ்த்து

மலர்தலை உலகின் மன்னுயிர்க் குறுதி
நிலைதருங் கிருஷிகன் நீடூழி வாழ்க!
புலவர்கள் போற்றும் பொங்கல்நன் னாளிற்
குலவுக மங்களம் குவலயத் தினிதே.

வந்தனை செய்வோம்

தாகத்தால் தவிப்புற்றிருந்த நம்முடைய பூமியை எங்கும் நிறைந்த மகா சக்தியான லோகமாதா குளிர்வித்திருக்கிறாள்; சற்றும் எதிர்பாராத வகையில் திடீரென்று நிறைய மழையை அள்ளி வர்ஷித்திருக்கிறாள் இந்த பெருங் கருணைக்காக எல்லாம்வல்ல லோகமாதாவுக்கு நம் எல்லாருடைய பணிவும் நம்பிக்கையும் கலந்த வணக்கங்களை செலுத்துவோம். கடவுளிடம் நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் அனைவரும் இதற்காக துதி செய்ய வேண்டுமென்று நாட்டிலிருக்கும் நல்ல மனிதர்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடலில் புயல் உதயமாகிக் காற்றும் மழையுமாக வீசியது. ஆனால் இந்த புயலை தோற்றுவித்த சக்தி எது? சூரியனில் ஏற்பட்ட ஏதோ ஒரு மாறுதல் காரணமாக இருக்கலாம். ஆனால் அந்த மாறுதலை ஏற்படுத்திய சக்தி எது?

நம் கண்களுக்கு தெரியாத அந்த சக்திக்கு நமது ஆழ்ந்த நன்றியை செலுத்துவோம்.

—ராஜாஜி.



உதிர்ந்த மணிகள்

கடமையும் உரிமையும்

"கடமையை ஒழுங்காக செய்தால்தான் உரிமைகளை பெற முடியும். எழுத்தறிவற்ற ஆனல் விவேகம் நிறைந்த என தன்னை எனக்கு போதித்த உண்மை இது.

ஆகவே உலகப்பிரஜை என்ற ஹோதாவில் நமது கடமைகளை நிறைவேற்றினல்தான் வாழும் உரிமையைக் கூட நாம் அனுபவிக்க முடியும்.

ஒவ்வொரு உரிமையும் அதற்கேற்ற கடமையுடன் இணைக்கவேண்டும். கடமையற்ற உரிமையைப்பெற போராடுவது வீண்".

—மகாத்மாஜி.

அறிவிப்பு

பல நேயர்கள் விருப்பப்படி இம்மாதம் வெளியிடப்பட விருந்த வனமஹோத்சவ மலர் சித்திரைமீ 1வ வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிரேம்.

மானேஜர் "கிருஷிகன்".

THE KIRUSHIKAN

A Tamil Monthly Journal Devoted to Agriculture and Rural Welfare

கி ரு ஷி க ன்

(கிராம முன்னேற்றப் பத்திரிகை)

"இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது
கை செய்தூண் மாலையவர்"
—குறள்.

பயிர் 1	நந்தன ஹு தைமீ	கதிர் 1

தையும் ஜனவரியும்

கிருஷிகன் நேயர்களுக்கெல்லாம் நமது பொங்கல் வாழ்த்துகள். நமது நாடு அடிமைத்தளையிலிருந்து விடுதலையடைந்து குடியரசுமாகி 3 ஆண்டுகள் கடந்துபோனபோதிலும், விவசாயிகள் கொள்முதல், கண்டிரோல் என்னும் தளைகளிலிருந்து இப்போதுதான் உண்மையான விடுதலை பெற்றனர் என்று கூறுவது மிகையாகாது "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று தமிழ் நாட்டில் பழமொழியுண்டு. தையும் பிறந்தது; கண்டிரோல்கள் ஒழிந்து, மழைபெய்து தண்ணீர்ப்பஞ்சம் நீங்கி விவசாயிகள் அதிகம் உற்பத்திசெய்து இஷ்டப்படி விற்க வழியும் பிறந்தது. எனவே விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கி, உணவு உடை பஞ்சங்கள் தீர்ந்து நாடு சுபிட்ச பாதையில் முன்னேற வழி செய்வார்கள் என்று எதிர் பார்ப்போமாக.

சென்ற ஐந்து ஆறு ஆண்டுகளாக பெய்யாத மழை ஒரே நாளில் புயலும் மழையும் கொட்டி தமிழ் நாட்டில் ஏரிகள் நிரம்பியிருந்தபோதிலும், பெரும்பாலும் தரிசு கிடந்த நிலங்கள் இப்போதுதான் சாகுபடியாகியுள்ளன. புன்சை மகசூல்கள் (தென்னாற்காடு ஜில்லாவில்) தவறிப்போனதன்றி, மணிலா மகசூலும் அறுவடை தாமதப்பட்டுள்ளது. விதை, சாகுபடி செலவுகளுக்காக விவசாயிகள் பட்ட துன்பம் சொல்லி முடியாது. எப்படியோ சாகுபடி செய்தும் மகசூல்கள் கைக்குவர குறைந்த பக்ஷம் இன்னும் 3 மாதங்களாவது செல்லும்.

சர்க்கார் கவனிக்குமா?

இந்த நிலைமையில் சர்க்கார் வரிகளை வசூலிக்க முற்பட்டிருப்பது ஏழை விவசாயிகளை மிகவும் பாதிக்கும் எனக் கருதுகிறோம். ஆகவே, வரி, தக்காவிக்கடன் இவைகள் வசூலிப்பை ஜனவரி முதல் ஏப்ரல்வரை என்பதை, மார்ச்சுமுதல் ஜூன்மீ வரை என்று நீடித்து கொடுப்பது மிகவும் அவசியமாகும். இதை சர்க்கார் உடனடியாக செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

ஆறு ஆண்டுகளாக காணாத ஜலத்தை இன்று கண்டவுடன் எவ்வளவோ கஷ்டப்பட்டு தரிசு நிலங்களை சாகுபடி செய்துவிட்டார்கள். ஆனால் தைமீக்குள் மீண்டும் ஒரு மழை பெய்யாவிடில் பெரும் பகுதி நிலங்கள் தண்ணீர் தட்டினால் பாதிக்கப்படக்கூடுமென்று அஞ்சுகிறோம். ஆகவே

முன்னேற்பாடு வேண்டும்

சர்க்கார் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன சாதனங்களை தவணையிலும், வாடகைக்கும் போதிய அளவு கொடுத்து உதவிசெய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

மத்திய ராஜ்ய சர்க்கார் பிரதி வருஷமும் வனமகோத்சவத்திற்காக ஏராளமான தொகை செலவுசெய்து வருகிறார்கள். உற்பத்தியைவிட இருப்பதை அழியாமல் காப்பது அவசியமும் அவசரமுமாகும். இப்போது புறம்போக்குகளிலும், சாலைகளிலும், காடுகளிலும் உள்ள மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பது அவசரமும் அவசியமுமாகுமென்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

அவசரம் அவசியம்

பால் பெருக

அ. ராம்கோபால்

உலகில் மற்ற எந்த நாட்டையும்விட நம் நாட்டில்தான் பால் மாடுகள் அதிகம். அப்படி இருந்தும் இன்று இங்கே பால் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் நம் பால் மாடுகள் மற்ற நாட்டு மாடுகளைவிட மிக மிகக் குறைவாகப் பால் கொடுப்பதே. இப்படி அவை பால் கொடுப்பதற்கு முக்கிய காரணம் நாம் அவற்றைப் போதிய தீனி கொடுத்துப் பராமரிக்காததே. மிக மிக மோசமாகக் கறந்து வந்த மாடுகளுக்குக் கீழ்க்கண்ட அளவுப்படி தீவனம் கொடுத்து வந்ததில் அவை மிகச் சிறந்த கறவை மாடுகளாக மாறி இருக்கின்றன. இது அனுபவ பூர்வமாகக் கண்டறிந்த உண்மை. ஆகையால் தங்கள் மாடுகளை நல்ல கறவை மாடுகளாக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட அளவுப்படி அவற்றிற்குத் தீவனம் கொடுத்துவந்தால் நல்ல வெற்றி காணலாம். இது ஒருநாளைக்குக் கொடுக்கவேண்டிய அளவு.

காலம்	கடலை புண்ணாக்கு	தவிடு	காய்ந்த தீவனம்
1. பலப்பட்டதிலிருந்து 8 மாதம் வரை ...	½ ராத்தல்	+ ½ ராத்தல்	+ 15 ராத்தல்
2. 8-வது மாதத்திலிருந்து ஈறும்வரை.	2 „	+ 2 „	+ 15 „
3. ஈன்றதிலிருந்து 6 மாதம் வரை ...	3 „	+ 3 „	+ 15 „
4. 6 மாதத்திற்குப்பின் கறவை நிறுத்தும் வரை ...	2 „	+ 2 „	+ 16 „

இவற்றைத்தவிர மாட்டுக்குத் தண்ணீர் காட்டும்போது அதோடு தினசரி இரண்டவுன்சு உப்பு அல்லது அரை ராத்தல் வெல்லம் கலந்து காட்டுவதும் நல்லது. மேலே கொடுக்கப்பட்டுள்ள அளவுகள் பசுமாடுகளுக்கே பொருந்தும். எருமை மாடுகளுக்கு மேல்படி அளவைப்போல் ஒன்றரை மடங்கு கொடுக்கவேண்டும்.

மேலே கூறியபடி தீனி கொடுத்தும் பால் பெருகவில்லை யென்றால் வேறு ஏதோ கோளாறு இருக்கிறதெனத் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்குக் கீழ்க்கண்ட ஏதாவதொரு முறையைக் கைக்கொண்டால் வெற்றி காணலாம்.

(1) ஈன்றபிறகு காய்ந்த புல்லோடு பச்சைப்புல்லும் சேர்த்துப் போட்டுவரவேண்டும். நாளுக்குநாள் பச்சைப்புல் லின் அளவை கூட்டிக்கொண்டே வரவேண்டும்.

(2) ஈன்ற மூன்றாவது நாளிலிருந்து தொடர்ந்து சில வாரங்களுக்கு உளுத்தங்குருணை கால்படி, அரிசிக்குருணை கால் படி, உப்பு கால் வீசம்படி, மஞ்சள் ஐந்து தோலா, திப்பிலிப் பொடி இரண்டு தோலா, வெல்லம் அரைக்கால் வீசை எல்லாம் தட்டித் தண்ணீர்விட்டுப் பொங்கி ஒரு நாளைக்கு ஒருமுறை வீதம் கொடுத்துவரலாம்.

(3) ஈன்ற மூன்றாவது நாளிலிருந்து தொடர்ந்து சில வாரங்களுக்கு சோற்றை நீராகாரம்விட்டுப் பிசைந்து அதோடு ஒரு சீப்பு வாழைப்பழத்தையும் தோலோடு போட்டு நசுக்கி நாளைக்கு ஒருமுறைவீதம் கொடுத்து வரலாம்.

(4) ஈன்ற மூன்றாவது நாளிலிருந்து சில வாரங்கள்வரை கொட்டைமுத்து எனப்படும் ஆமணக்கு விதைகளைக் கொட்டி வேகவைத்த நீரை தினசரி ஒருமுறை வீதம் கொடுத்துவரலாம்.

(5) ஈன்ற மூன்றாவது நாளிலிருந்து சில வாரங்கள்வரை தினசரி ஒருமுறை கரும்புத்துண்டு, கரும்புச்சக்கை மூங்கில் இலை, அவித்த பட்டாணி, மொச்சை, காணம், தட்டைப்பயிர், நரிப்பயிர் முதலியவையும் கொடுத்துவரலாம்.

(6) சில வாரங்கள் வரை தினசரி ஒருமுறை மூங்கில் இலையை வேகவைத்து அதோடு சிறிது வெல்லமும் சேர்த்துக் கொடுத்து வரலாம்.

(7) பருப்பு வேகவைத்த நீரில் சிறிது புளியைக் கரைத் தும் தினசரி ஒருமுறைவீதம் சில வாரங்கள் கொடுத்துவரலாம்.

(8) சாதம் வடித்த கஞ்சியில் சிறிது வெல்லத்தைத் தட் டிப்போட்டு தினசரி இரண்டு மூன்று வேளை வீதம் சில வாரங் கள் கொடுத்துவரலாம்.

(9) பருப்பும் பச்சரிசியும் கலந்து பொங்கி ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டுவேளை வீதம் சில வாரங்கள் கொடுத்து வரலாம்.

(10) பொட்டாசியம் நைட்ரேட் ஒரு பங்கு, படிக்காரம் ஒரு பங்கு, சீரகம் பத்து பங்கு, வெள்ளைச் சந்தனம், இரண்டு பங்கு, உப்பு பத்துப்பங்கு, சோம்பு பத்துப்பங்கு, கிராம்பு ஐந்து பங்கு எல்லாம் ஒன்ருகப் போட்டு இடித்துவைத்துக்கொண்டு காலையில் ஒரு கைபிடி, மாலையில் ஒரு கைபிடி வீதம் சில வாரங்கள் கொடுத்துவரலாம்.

(11) பப்பாளிக்காயையும் இலையையும் அரைத்து வெல்லத்தோடும் அரிசி மாவோடும் கலந்து காலை மாலை இருவேளை சில வாரங்கள் கொடுத்தால் நிச்சயம் பால் பெருகும்.

(12) முட்டைக்கோசு இலை, முள்ளங்கி இலை, உருளைக் கிழங்கு இலை, முருங்கை இலை, பப்பாளி இலை, காரட் இலை, டர்னிப் இலை முதலியவைகளை தினசரி தீவனமாக சில வாரங்கள் கொடுத்துவந்தால் பால் பெருகும்.

(13) புரசம்பூ, இலுப்பைப்பூ, இலவம்பூ, புளிச்சைப்பூ, நெய், வில்வப்பழம், மாம்பழம், கடலைக்கொடி, வேகவைத்த சீத்தாப்பழ மரப்பட்டை முதலியவைகளும் சில வாரங்கள்வரை கொடுத்து வரலாம்.

(14) நாட்டுச் சாராயம் வடித்தபிறகு அடியில் எஞ்சியுள்ள மண்டியைப் புகட்டினுல், புகட்டிய இருபத்துநான்குமணி நேரத்துக்குள் பால் பெருகும்.

(15) அரைவீசை வெல்லத்தோடு மூன்று படி பார்லி அரிசியைப்போட்டு வேகவைத்துக் கொடுத்துவிட்டால் அதிகமாகப் பால் கொடுப்பதோடு நீண்ட நாட்களுக்கும் பால் சுறக்கும்.

(16) ஈன்ற பிறகு பால் சரியாகவோ அல்லது முற்றிலும் சுரக்காமலிருந்தால் ஆமணக்கு இலையை வதக்கி வெது வெதுப்பான நிலையில் மடிக்கு ஒத்தடம் கொடுக்கவேண்டும். சூடு அதிகமாக இருக்கும்போது கொடுத்தால் மடி புண்ணுகிவிடும். ஆகையால் இது விஷயத்தில் ஜாக்கிரதை வேண்டும். ஒத்தடம் கொடுத்து முடித்ததும் அதே இலையால் மடியை மூடிக் கட்டி விடவேண்டும். இப்படிச் செய்தால் மடி இறங்கிப் பால் சுரப்பதோடு மடியும் மிருதுத் தன்மை அடையும்.

ஈன்றபிறகு சில நாட்கள் வரை நன்ருகப் பால் கொடுத்துக் கொண்டுவந்து பிறகு திடீரென ஏதாவது ஒரு காரணத்தால் பால் பூரணமாக வற்றிப்போனுலோ அல்லது பாலின் அளவு குறைவுபட்டாலோ கீழ்கண்ட ஏதாவதொரு சிகித்சைசெய்தால் வெற்றி காணலாம்.

1. பசும்பால்	...	ஒரு படி
வெல்லப்பாகு	...	அரைப்படி
கோதுமை அரிசி	...	அரைப்படி
பெருநெல் அரிசி	...	அரைப்படி

நான்கையும் ஒரு படி தண்ணீரில் கொட்டி வேகவைத்து காலையில் பாதி மாலையில் பாதி வீதம் சில நாட்கள் கொடுத்துவந்தால் நிச்சயம் பால் பெருகும்.

2. கல்லுருவி வேர்	...	10 தோலா
பாகல் இலை சார்	...	வீசம்படி

இரண்டையும் ஒன்ருக அரைத்து காலை மாலை இரு வேளை சில நாட்கள் கொடுத்துவந்தால் குணம் தெரியும்.

3. புளிச்சைவிதை மாவு	...	அரைப்படி
வெல்லப்பாகு	...	அரைப்படி

இரண்டையும் ஒன்ருகப்பிசைந்து 24 உருண்டைகளாகஉருட்டி வைத்துக்கொண்டு காலை, மாலை, உச்சி மூன்று வேளையும் வேளைக்கு ஒரு உருண்டைவீதம் எட்டுநாள் கொடுக்கப் பால் பெருகும்.

4. சுக்கு	...	10 தோலா
ஜவ்வரிசி மாவு	...	அரைக்கால்படி

இரண்டையும் கலந்து காலை மாலை இரு வேளை வேளைக்குக் கை பிடி அளவு ஒரு வாரம் வரை கொடுக்கலாம்.

5. தினசரி ஐந்து தோலா தண்ணீர்விட்டான் கிழங்கை அரைத்து தண்ணீரில் கலக்கி தினசரி ஒருவேளை வீதம் ஒரு மாதம் வரை கொடுத்துவந்தால் பால் பெருகும்.

6. மடியில் ஏதாவது பாலிருந்தால் அதையெல்லாம் பீச்சி வெளியேற்றிவிட்டு வெது வெதுப்பான நெய்யில் உப்பைக் கலந்தோ அல்லது பிராந்தி என்னும் சீமைச் சாராயத்தையோ தினசரி காலை மாலை இரண்டு வேளை சில நாட்கள் மடியில் பூசித் தேய்த்துவந்தால் பால் பெருகும்.

மேலே கூறிய ஆறு முறைகளையும் சாதாரணமாகவே குறைவாகக் கறக்கும் மாடுகளின் பால் அளவைக் கூட்டவும் கையாளலாம்.

விஞ்ஞானமும் உணவும்

(மத்திய உணவுத்தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கழகம், மைசூர்)

கழகம் முதலாண்டில் செய்துள்ள வேலைகளின் குறிப்பு.

கழக ஆரம்பம்:—இக்கழகமானது நமது பிரதமர் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் மத்திய அரசாங்க உள்நாட்டு மந்திரியாக இருந்த சமயம் 21—10—50ல் மைசூர் ராஜப் பிரமுகர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும். கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி திட்டக்கமிஷனின் சிபாரிசுகளின்படி கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி கழகத்தின் ஆதரவின்கீழ் நிர்மாணிக்கப்படவிருக்கும் 11 ஆராய்ச்சிக்கூடங்களில் 6-வது ஆகும். 2-வது மகாயுத்தத்தின் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை சமாளிக்க, உணவு சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடத்துவதன்மூலம், நம்நாட்டில் கிடைக்கும் உணவுப்பொருள்களை நல்ல முறையில் சேமித்து வைக்கவும் அவை மேலும் அதிகமாய் பயன்படும்படி செய்யும் வழிகளை கண்டுபிடிப்பதுதான் இந்த கழகத்தின் லக்ஷியமாகும்.

கழகத்தின் அமைப்பு:—இந்த கழகமானது, ஒரு காலத்தில் மைசூர் ராஜகுமாரியின் அரண்மனையாக இருந்துவந்ததும், இவ்வாராய்ச்சிக் கூடத்திற்காக மைசூர் மகாராஜாவால் மனமுவந்து அளிக்கப்பட்டதுமான செலுவாம்பா மாளிகையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சுமார் 150 ஏகர் விஸ்தீரணமுள்ள பரந்த இடத்தில் மனோரம்மியமான நந்தவனங்களால் சூழப்பட்டு மத்தியில் கம்பீரமாக நிற்கும் இம்மாளிகை சுமார் 1,00,000 சதுர அடிகள் தளம் கொண்டதும் 130 கூடங்கள் (Halls) உடையதுமாகும். மேலும் 35,000 சதுர அடிகள் விஸ்தீரணமுள்ள 50 அறைகள் கொண்ட கட்டிடம் இருப்பதுடன் இருபக்கங்களிலும் கட்டிடம் (Wings) மிகவும் விசாலமான வர்ண ஜாலங்களுடையதுமான கூடங்களுடனும் இருக்கின்றன. இதில்தான் இக்கழகத்தின் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்படுகிறது.

இவ்வாராய்ச்சி கழகம் அமைப்பதில் மிகவும் அக்கரைகொண்டிருந்த 14 ராஜ்யங்கள் இடவசதி செய்துகொடுக்க முன்வந்தன. இருந்தபோதிலும் இக்கழகம் நிர்மாணிப்பதற்கு ஏற்ற இடம் மைசூர்தான் என்று தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏனெனில் அரிசியையே பிரதான உணவாககொண்டவர்கள் வாழும் பிரதேசமும், சோளம், ராகி, கம்பு, தினைபோன்ற சிறுதானியங்கள் (Millets), கிழங்கு வகைகளும் பிரதான உணவுப்பொருளாக விளங்கும் பிரதேசங்களும் சந்திக்கும் இடத்தில் மைசூர் அமைந்திருக்கிறது மேலும் இங்கு காய்கறிகளும், கனிவர்க்கங்களும் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

இக்கழகத்தை தோற்றுவிக்க மூலபுருஷராக இருந்த திட்டக்கமிஷன் அதிகாரி ஸ்ரீ V. சுப்ரமணியம் அவர்களே இதன் முதல் டைரக்டராக ஏற்று சிறந்த முறையில் நிர்வாகம் செய்து வருகிறார் பிறகு இக்கழகத்திற்கு தேவையான சாதனங்கள், கருவிகள் தொழுவம், வாசகசாலை, தொழில் கூடம் முதலியன ஏற்படுத்தப்பட்டு 1950ளு மார்ச்சு மாதத்தில் டெல்லியிலிருந்து மத்திய கனிவர்க்க ஆராய்ச்சிகூடமும் இங்கு மாற்றப்பட்டு இக் கழகத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

கழகத்தின் முதல் வருட சாதனைகள்:—இவ்வாராய்ச்சிக் கூடங்களில் வேலை துவங்கி ஒரு வருடந்தான் ஆனபோதிலும் நாட்டின் உடனடியான தேவைகளை சமாளிப்பதற்காக "அவசரகால உணவுகள்" உற்பத்தி விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்தபபட்டு வருகிறது. இவ்வாராய்ச்சிகளிலிருந்து அரிசி, கோதுமை, சோளம், ராகி, கம்புபோன்ற தானியங்களில் போஷாக்குள்ள வள்ளிக்கிழங்கு மரவள்ளிக்கிழங்கு போன்றவைகளை உபயோகப்படுத்துவதன்மூலம் 25 சதவீதம் குறைத்துக்கொள்ளக்கூடுமென்று தெரிகிறது.

இவைகளில் முக்கியமாக மரவள்ளிக்கிழங்கிலிருந்து ரவை, மாவு தயாரிக்கும் முறைகள்; மரவள்ளிக்கிழங்கு மாவு* நிலக்கடலைமாவு இரண்டையும் சேர்த்து செய்யப்படும் (செயற்கை அரிசி); நிலக்கடலையிலிருந்து தயாரிக்கப்படும் பாலும் தயிருமாகும்.

இவ்விதம் நிலக்கடலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பாலும் தயிரும் பசும் பால் தயிர் போன்றிருப்பதாலும், விலை குறைவாகவே இருப்பதாலும் மைசூரில் மிகவும் பிராபல்யமடைந்து நாளுக்குநாள் இவற்றிற்கு அதிக கிராக்கியும் ஏற்பட்டு வருகிறது. தென்னிந்தியாவில் பல இடங்களில் செய்து காண்பிக்கப்பட்ட பரிசோதனைகளிலிருந்து இச்செயற்கை அரிசி கோதுமை, அரிசி ஆகாரத்துடன்கூட ஒரு உப உணவாக உபயோகிப்பதற்கு ஏற்றதாக இருப்பதால் நாளுக்குநாள் இச்செயற்கை அரிசிக்கும் கிராக்கி ஏற்பட்டு வருகிறது. தினசரி 10 டன் அரிசி [அரிசியைப்போலவே நிறம் அளவுடன்] உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை நிறுவ ஏற்பாடு செய்யபபட்டு வருகிறது. மற்றும் இவ்வாராய்ச்சி கழகத்தின் சாதனைகளில் சமைத்த காய்கறிகளை தயாரிப்பது, சமைத்த கத்தரிக்காய், தக்காளிக்காய், உருளைக்கிழங்கு, காபிளவர், காபேஜ், பீன்ஸ், அவரை, பட்டாணி, முதலியவைகளை டப்பாக்களில் அடைத்து பதப்படுத்துவது உள்நாட்டில் கிடைக்கக்கூடிய பல வகைப் பொருள்களிலிருந்து காடி (வினிகார்) தயாரித்தல், சட்னி தயாரிப்பதற்கு மாங்காய்களை பச்சையாக நறுக்கி பதப்படுத்திவைப்பது, தக்காளி கப்சப் முதலியன; தண்ணீரில் கரையக்கூடிய காப்பித்தூள் முதலியன முக்கியமாகும்.

தகவல் அறிவிப்பு சாதனம்:—தொழில்துறையினரின் நலன் கருதி தொழில் நுட்ப விஷயங்கள்பற்றிய பிரசுரங்களையும் கழகம் வெளியிட்டுவருகிறது. ஆங்கிலத்திலும் மற்ற ஐரோப்பிய பாஷைகளிலும் வெளிவரும்

விசேஷ முக்கியத்துவம்கொண்ட தொழில்நுட்ப தகவல்கள் இப்பிரசுரங்களில் கொடுக்கப்படுகின்றன. பழங்கள் பழரசங்கள், ஊறுகாய் காய்கள், ஜாம்கள், முதலிய பொருள்களை தயாரித்து பதப்படுத்திவைக்கும் முறைகளை எளியநடையில் விளக்கி எழுதப்பட்டுள்ளன. இதுவரை இவ்விதம் 35 பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்கழகத்தின் டீ ஒற்றைத்தாள் பிரசுரங்களுக்கு அதிக கிராக்கி இருந்து வருகிறது.

சென்ற செப்டம்பர் முதல் ஆங்கிலத்தில் சைக்லோஸ்டைல் செய்யப்பட்டு மாத சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டு வருகிறது. இந்தியாவின் உணவுத் தொழில்நுட்ப விஷயத்தின் எல்லா அம்சங்கள்பற்றியும் தகவல்கள் அடங்கிய சிறு புத்தகம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகிறது. "உணவும்—ஜனப்பெருக்கமும்" உணவுத்தொழில் அபிவிருத்தி" பற்றிய வெளியீடுகள் பிரசுரிக்கவும் எற்பாடு செய்துவருகிறது. இக்கழகத்தின் வாசகசாலைக்கு ஒராண்டுதான் ஆனபோதிலும் உணவுத்தொழில் நுட்ப சம்பந்தமான 3000 புத்தகங்களும் 358 சஞ்சிகைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

எதிர்கால வேலை திட்டமும் வசதிகளும்:—இந்தியாவின் எதிர்காலத்தில் இந்தக் கழகம் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ உள்ளது. வீணுக அழிந்துபோகக்கூடிய பழங்கள் காய்கறிகள், மாமிசம்: மீன், முட்டை பால், ஆகியவைகளை நீண்டகாலம் கெடாமல் சரியான முறையில் பக்குவப்படுத்தி உபயோகிக்கும் முறைகளை விருத்தி செய்தல் மற்றும் பல புதிய உணவுகளை தேடி ஆராய்ச்சி செய்வது இவைகள் முக்கிய திட்டமாகும். இக்கழகம் 10 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒவவொரு துறையில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. தொழில் துறையினர்களிடமிருந்து இம்முயற்சிகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால் இக்கழகத்தின் எதிர்கால வேலைத்திட்டம் நாட்டிற்கு நல்ல பலனளிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

---

*அடுத்துவரும் இதழ்களில் நிலக்கடலை பால் முதலிய பல அரிய கட்டுரைகள் தொடர்ந்து வெளியாகும் நேயர்கள் தங்கள் பிரதிக்கு உடனே பதிவு செய்துகொள்ள கோறப்படுகிறுர்கள். (ப—ர்.)

அறிவிப்பு

கிருஷிகன் நேயர்களின் விருப்பப்படி கிருஷிகனுக்கு சந்தா பதிவு செய்துகொள்ளும் காலத்தை 10—3—1953 வரை நீடித்துள்ளோம். டீ தேதிக்குள் பதிவு செய்துகொள்பவர்களுக்கு "கிருஷிகன்" பௌண்டன் பேஞ & கிருஷிகன் காலண்டரும் இஞமாக கொடுக்கப்படும்.

(2) இன்னும் சந்தா பாக்கியையும், தபால் செலவையும் அனுப்பாத நேயர்களை 31—1—53-க்குள் அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

மானேஜர் "கிருஷிகன்"

உழவின் உயர்வு

(ஸ்ரீ C. தங்கசாமி அய்யர், ஆசிரியர், இலங்கை)

விருத்தம்

1. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வா ரென்றிங்
குலகறிய வள்ளுவனார் உரைத்தார் வேறு
பழுதுள்ள தொழில்கள்பல செய்து செய்து
பலநாளும் வருந்தாதீர்; பகரக் காண்மின்!
தொழுதுண்டு பின்செல்ல வேண்டா முண்மைச்
சுகமுள்ள வேளாண்மை தொடர்ந்து செய்வீர்
முழுதுலகும் பாரதத்தை நோக்கி நிற்கும்
முதன்மை பெறலா மெவர்க்கும் மொழிகுவீரே.

2. சீராரும் கங்கையெனும் நதியு முண்டு
சிந்துநதி இந்துநதி சிறக்க உண்டு
பேராரு நதிகள் பலபிறவு முண்டு
பெருகி யிவை தவழுகின்ற தேசந்தோறும்
நேராரும் தொழிற்சாலை நிறுவி நாட்டின்
நெற்குத்தி அரிசி யெடுத்துலக மெங்கும்
தாராளமாய் வழங்கிப் பஞ்சம் போக்குந்
தன்மையது போற்றவரும் தகையதாமே.

3. நதியுண்டு குளமுண்டு நமக்கு நல்ல
நாடுண்டு வயலுண்டு நாடிச் செய்ய
மதியுண்டு வேளாண்மை மகிழ்ந்து செய்வீர்
மன்னராய் நாமெல்லாம் வாழ்வதற்கு
விதியுண்டு முயற்சி யொன்றே மிகவும்வேண்டும்
விரைந்தெவரு மூக்கமுடன் விளங்கவேண்டும்
கதியுண்டு நாட்டுக்கு கவலை வேண்டாம்
காசினியோர்க் கெம் முயர்வு காட்டுவோமே.

பாதாள கங்கை அல்லது குழாய் கிணர்

கண்டுபிடிக்கும் விதங்களும், இயற்கை அமைப்புக்களும்

By

என். ஜி. ஆப்தே, பி. எஜி., (ப) எம். எஸ்ஸி., (T) எப். ஜி. எம். எஸ்.
(ஜல நிர்மாண நிபுணர்)

[முன் இதழ் தொடர்ச்சி]

இவ்விதமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஊற்றுக்கள் (நீரோட்டம்) யோக சக்தியினால் பார்க்கப்பட்டதா, விஞ்ஞான சாஸ்த்ரீய ஆராய்ச்சியினால் கண்டுபிடிக்கப்பட்டதா என்பதை அறிந்துகொள்ளக்கூடிய திருப்திகரமான அத்தாக்ஷிகள் கிடைக்கவில்லை. இந்தக் கட்டுரையின் ஆசிரியர் பர்ஹான்பூர் அருகில் நகருக்கு குடிஜலம் சப்ளை செய்யப்படும் ஊற்றுக் கிணறுக்குச் சென்று பார்த்திருக்கிறார். இதைப்பற்றி விரிவான விசாரணைகள் செய்ததிலிருந்து ஷை நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிப்பதற்கான சில முறைகள் நாட்டில் இருப்பதாகவே தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக எந்த முறைகளினால் இந்த ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதென்பதற்கு போதிய (தஸ்தாவேஜுகள்) ஆதாரவுகள் கிடைக்கவில்லை. இந்தக் கட்டுரையின் ஆசிரியருக்கே Intuition என்னும் சக்தியில் கொஞ்சம் பழக்கமும் அனுபவமும் இருந்தது. எங்கெந்த இடங்களில் பாதாள கங்கை (நீரோட்டம்) இருக்கிறதென்று அனுமானிக்கப்பட்டதோ, அந்த இடங்களைப்பற்றியெல்லாம் ஒரு குறிப்பு தயாரித்துவந்தார். பிறகு (நீரோட்டம்) நீரூற்று கண்டுபிடிக்கும் (Automatic Water Finding) கருவியினால் அந்த இடங்களை பரிசோதனை செய்துபார்த்து தேர்ந்தெடுக்கப்பட்டது. ஷை இடங்களில் கிணறு வெட்டியும், துளைப்போட்டு (Boring) பார்த்து குழாய்க் கிணறு (Tube Wells) அமைத்தும் பரிசோதிக்கப்பட்டன.

இம்மாதிரியான குழாய்க்கிணறுகளில் (Tube Wells) ஒன்று (Terwad) தெர்வாடில் டாக்டர் வைக்கார் (Waikar) என்பவரின் வயலிலும் மற்றொன்று (Koregan Park) கோரேகான் தோட்டத்தில் சீசாபாய் பிரேம் சந்து என்பவரின் பங்களாவிலும் அமைக்கப்பட்டது. இது சம்பந்தமான விரிவான புள்ளி விபரங்களை பம்பாய் ராஜ்ய விவசாய இலாகா துண்டுப்பிரசுரத்தில் வெளியிட்டிருக்கிறார்கள்.

கிணறுகள் வெட்டி பார்க்கப்பட்ட இடங்களில் G. I. P. ரயில்வே மன்மாடு (Munmad` ஸ்டேஷனில் (Mr. Kadam) காடம் என்பவருடைய இடம் ஒன்றாகும். இந்த இடத்தை சோதனைசெய்தகாலமாவது ஷை கிணறு சோதிக்கும் கருவி (Automatic Water finding Machine) சரியாக வேலை

செய்வதற்கு ஏற்ற காலமாக இல்லை. இருந்தாலும் நீரூற்று (நீரோட்டம்) உள்ள உணர்ச்சி நிச்சயமாக ஏற்பட்டதினால் ஆசிரியரின் ஆலோசனைப்படி கிணறு வெட்டியதில் நல்ல ஜலம் கிடைத்தது. M. S. M. ரயில்வே, மிராஜ் (Miraj) ஸ்டேஷனில் வெட்டிய கிணர் மற்றொன்றாகும். இங்கும் மேலே மன்மாடில் காணப்பட்ட நிலமையிலேயே நல்ல ஜலம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விரண்டும் ஜலக்குறைவான பிரதேசமட்டுமென்றி அருகிலுள்ள அநேகம் கிணறுகளும் வரண்டுபோயுமிருந்தன.

ஆசிரியரின் இந்த பரிசீலனைக்குப் பிறகும்கூட இது Intuition என்னும் சக்தியா அல்லது கடந்த 6 ஆண்டுகளாக நீர்ப்பாசன, பூதத்வ சம்பந்தமாக தான் செய்துவரும் ஆராய்ச்சியின் பயனு என்று சொல்லக்கூடவில்லை. தவிர மேலே கூறப்பட்ட தன்னிடம் காணப்படும் (Intuition) சக்தியை மட்டும் ஆதாரமாக நம்பிக்கொண்டிராமல் மேலும் குறிப்பிட்ட இடத்தின் இயற்கை அமைப்பு சீதோஷ்ண நிலமை முதலியவைகளையும் நன்றாக தெரிந்துகொண்டும் நீரூற்று கண்டுபிடிக்கும் கருவியை உபயோகித்தும், நீரோட்டத்தை கண்டுபிடித்து ஆலோசனைக் கூறிவந்தார்.

Intuition என்பது ஆராய்ச்சியின்மூலம் அபிவிருத்தி செய்துகொள்ளக் கூடிய சக்தியாக இருந்தால், அவ்விஷயத்தைப்பற்றி விஞ்ஞான சாஸ்திரீய ரீதியில் எவ்வளவுதூரம் நன்கு ஆராய்ச்சி செய்கிறோமோ அவ்வளவு தெளிவாக நீரூற்று (நீரோட்டம்) இருப்பதைப்பற்றி அறிந்துகொள்ளும் சக்தியை அடையலாமென்பது புலனுகிறது. அதாவது கொஞ்சம் அனுபவமும் பயிற்சியும் ஏற்பட்டபிறகு குறிப்பிட்ட இடத்தின் இயற்கை நிலமைகளைக் குறிக்கும் (Topographic Sheet) அட்டவணையை பார்த்தும் நிலமைகளை நேரில் அறிந்துகொள்வதின் மூலமும் இவ்வித சக்தியை அடையலாகும்.

இம்மாதிரி துரிதமாக தெரிந்து சொல்லக்கூடிய ஆற்றலைத்தான் Intuition என்னும் சக்தி யென்பதானுல் இந்நிலையைப்பற்றிய ஆழ்ந்த படிப்பு, இயற்கை, விஞ்ஞான, சாஸ்த்ரீய ஆராய்ச்சி இவைகளின் மூலம் தெளிவாக உணர்ந்து சொல்லக்கூடிய இவ்வித (Intuition) சக்தியை அடையலாம் என்று ஏற்படுகிறதல்லவா?

மறுபடியும் இந்த விஷயத்திற்கு வருவோமானுல் இந்த Intuition என்னும் சக்தியானது நீண்டகால ஆராய்ச்சி, அனுபவம் சம்பந்தப்பட்ட இடத்தின் இயற்கை நிலமை, புள்ளி விபரங்கள் ஆகியவைகளை துரிதமாகவும், தெளிவாகவும் தெரிந்துகொள்ளக்கூடிய ஆற்றலைத்தான் Intuition சக்தி என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படி இதைத்தான் Intuition சக்தி என்று ஒப்புக்கொள்வோமானுல், இப்போதும் நீர்ப்பாசன, பூதத்வ, இயற்கை சம்பந்தமான ஆராய்ச்சி நிபுணர்களில் இவ்வித சக்தியுடையவர்கள் சிலர் நிச்சயமாக இருக்கக்கூடுமென்பது புலனுகிறது. —தொடரும்.

குறிப்பு:—அடுத்த இதழ்களில் பாதாள கங்கை அமைப்பின் சித்திரப்படங்கள் வெளியாகும். உங்கள் பிரதிக்கு பதிவு செய்துகொள்ளுங்கள்.

கிருஷிகன் நேயர்களுக்கு ஓர் விருந்து

காடு செழித்து நாடு வளம்பெற



ஏன் ?

எங்கே ?

என்ன ?

எப்படி ?

எப்போது ?

மரங்களை நடவேண்டும்? நட்டபின் பாதுகாத்து வளர்ப்பது எப்படி? அப்படி வளர்ப்பதால் நாட்டின் விவசாயம் கைத்தொழில், பொருளாதாரம் விருத்தியாகி நாடு முன்னேற்ற மடையுமா? அதனுல் நாட்டுக்கும் நமக்கும் ஏற்படும் நன்மைகள் எவை ? என்பதைப்பற்றிய பல அரிய கட்டுரைகள், சித்திரங்கள் பலவும் நிறைந்த

கி ரு ஷி க ன்

விசேஷ வன மகோத்சவ மலர்

விவசாயிகளுக்கு மட்டுமன்றி கிராம பஞ்சாயத்து போர்டுகள், கூட்டுறவு சங்கங்கங்கள், வாசக சாலைகள், கல்வி நிலயங்கள், ஜில்லாபோர்டுகள், முனிசிபாலிடிகள், மற்றும் நம் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஒரு பொக்கிஷமாகும்.

அழகிய வர்ண ஆர்ட் அட்டை படத்துடன்

(டெமி 1/8 × 100 பக்கங்களுக்குமேல் கொண்டது)

விலை அணு 12 **தபால் செலவு 0—1—9**

உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

கி ரு ஷி க ன்

(கிராம முன்னேற்ற தமிழ் மாதப் பத்திரிகை)

விவசாயம் கைத்தொழில் கால்நடை, கூட்டுறவு, சுகாதாரம் கல்வி முதலிய கிராம முன்னேற்ற சம்பந்தமான கட்டுரைகள், கதைகள், கவிதைகள், நாடகங்கள் பலவும் நிறைந்த தமிழ் வெளியீடு.

விசேஷ மலர் உள்பட

வருட சந்தா ரூ. 3 **மாதிரி பிரதி 0—5—0**

விபரங்களுக்கு:—

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் : அன்னியூர் P. O. : விழுப்புரம் S. I. R.

Reg. No. M. 5790

KIRUSHIKAN
(NEW SERIES)

JAN. 1953

அதிக உணவு உற்பத்திக்கு

சிறந்த மார்க்கம்

★ நல்ல உழவு

★ தேவையான நீர்

★ காலத்தில் களை

★ சிறந்த உரம்

★ தக்க காபந்து

ஆகியவைகளே.

இவைகளை சிக்கனமாக குறைந்த நேரத்தில் திறமையாக
வேலை செய்யும் கலப்பைகள், பக்கட் கவலைகள்,
கதிரடிக்கும் இயந்திரங்கள் முதலிய பலவித
விவசாயக் கருவிகள், விதைகள்,
செடிகள் தேவைக்கு
விசாரிக்கவும்

மானேஜர்
"பயிர்த்தொழில் பண்ணை"
ஹனுமந்தபுரம் - அன்னியூர் P. O., - விழுப்புரம் S. I. R.

Edited and published by A. S. Venkata Rao (Payirthozil Pannai)
Hanumanthapuram, Anniyur P. O., Villupuram S. I. R.
Printed at the Hanuman Printing Works, Villupuram.